பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

22 10 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஹார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக தேர்தல் நடைபெறும் 122 தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நிறைவடைந்தது.

2. பொலிவியா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திரு. Rodrigo Paz Pereira-வுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

3. இந்திய கடற்படை கமாண்டர்களின் 3 நாள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

4. ரஷ்யாவில் இருந்து 2028ஆம் ஆண்டு முதல் எரிசக்தி பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடைக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

5. ஃபிரெஞ்ச் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக தேர்தல் நடைபெறும் 122 தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நிறைவடைந்தது.

அப்போது கிழக்கு சம்பரன் மாவட்டம் Sugauli சட்டப்பேரவைத் தொகுதியில் Vikash Sheel Insan கட்சி வேட்பாளரின் மனு நிராகரிக்கப்பட்டது.

போதிய எண்ணிக்கையிலான நபர்கள் வேட்புமனுவை முன்மொழியாததால் அவர்களது மனு நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் லோக் ஜன்சக்தி கட்சியைச் சேர்ந்த திரு. ராஜேஷ் குமார் மனு ஏற்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநிலம் முழுவதும் அரசியல் கட்சிகள் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஐக்கிய ஜனதா தள தலைவரும், பிஹார் முதலமைச்சருமான திரு. நிதிஷ் குமார், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மினாபுர் மற்றும் Kanti சட்டப்பேரவைத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தமது அரசு மேற்கொண்ட வளர்ச்சிப் பணிகளை அவர் எடுத்துரைத்தார்.

துணை முதலமைச்சரும், பிஜேபியைச் சேர்ந்தவருமான திரு. சாம்ராட் சௌத்ரி, கோபால்கஞ்ச், Sasaram, Mohania, Ramgarh தொகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றினார்.

ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் திரு. பப்பு யாதவ், தங்கள் கூட்டணிக்கு மக்கள் ஆதரவு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், விரைவில் பிரச்சாரத்தை தொடங்குவார் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவை தேர்தலையொட்டி அறிவிக்கப்பட்டுள்ள நடத்தை நெறிமுறைகள் மீறப்பட்டால் அதுகுறித்து தற்போது C-Vigil செயலியில் மக்களும், அரசியல் கட்சியினரும் புகார் அளிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், புகார் கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அதை மாவட்ட தேர்தல் அதிகாரியும்,

சம்பந்தப்பட்ட தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரியும் விசாரிப்பதாக கூறியுள்ளது.

தேர்தலையொட்டி நடத்தப்பட்ட சோதனையில் இதுவரை 71 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புடைய ரொக்கம், இலவசப் பொருட்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

பொலிவியா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திரு. Rodrigo Paz Pereira-வுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இரு நாடுகளுக்கு இடையே பகிரப்பட்ட வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான கூட்டாண்மையை எதிர்வரும் காலங்களில் வலுப்படுத்த தாம் ஆவலுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

இந்தியாவுக்கும்-பொலிவியாவிற்கும் இடையேயான நெருக்கமான நட்புறவு நீண்ட காலமாக பரஸ்பரம் இருதரப்புக்கு நன்மை பயக்கும் ஒத்துழைப்பு அளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்திய கடற்படை கமாண்டர்களின் 3 நாள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உரையாற்ற உள்ளார்.

ராணுவ தலைமைத் தளபதி, விமானப் படை தலைமைத் தளபதி ஆகியோர் கடற்படை உயரதிகாரிகளுடன் விவாதிக்க உள்ளனர்.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பு சூழலுக்கான திட்டங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று பிற்பகல் காற்றழுத் தாழ்வு மண்டலமாக மாறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தில் செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் இன்று அதி கனமழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

சென்னை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தஞ்சாவூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த அமையம் தெரிவித்துள்ளது.

26ஆம் தேதி வரை சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் நாளை முதல் அரபிக் கடல், வங்கக் கடல், தெற்கு அந்தமான் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கன மழை எச்சரிக்கை காரணமாக காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருவாரூர், திருவள்ளூர், திருச்சி, சிவகங்கை, ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, புதுக்கோட்டை, சேலம், பெரம்பலூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அடுத்த மாதம் முதல் 155 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சீனாவுடன் நட்புறவு தொடரும் என்று அண்மையில் தெரிவித்திருந்த நிலையில், தற்போது அவர் இம்முடிவை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்யாவில் இருந்து பெருமளவில் எண்ணெய் இறக்குமதி செய்யும் சீனாவின் நடவடிக்கையால் அமெரிக்காவிற்கு பாதகமாக இருப்பதாக கூறினார்.

இந்த ஒருதலைபட்ச வர்த்தக நடைமுறைகளால் அமெரிக்கா புதிய வரி விதிப்பது அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் சீன நிர்வாகம் அமெரிக்க பொருளாதரத்திற்கு எதிராக இருந்ததாகவும், இதையடுத்து வலுவான நடவடிக்கைகள் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஐரோப்பிய யூனியன், ஜப்பான், தென்கொரியா நாடுகளுடன் இதே உத்திகளின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த வரி விதிப்பு மூலம் அமெரிக்காவுக்கு பெரும் வரி வருவாய் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

யுக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருக்கும் நாடுகளை இலக்காகக் கொண்டு வரி விதிக்கப்படுவதாக திரு. ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ரஷ்யாவில் இருந்து 2028ஆம் ஆண்டு முதல் எரிசக்தி பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடைக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

லக்ஸம்பர்க்-கில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போது இதற்கான தீர்மானத்திற்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் வாக்களித்தனர்.

இதன்மூலம் ரஷ்யாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு குழாய் வழியிலான எண்ணெய் வினியோகம் மற்றும் திரவ இயற்கை எரிவாயு வினியோகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு வினியோகங்களில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் காரணமாக எரிசக்தி தேவைக்காக ரஷ்யாவை சார்ந்திருப்பதை தவிர்க்கும் வகையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐரோப்பிய கவுன்சில் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

காஸா சண்டைநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு நடத்த அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance இஸ்ரேல் சென்றுள்ளார்.

ஹமாஸ் அமைப்புக்கும் - இஸ்ரேலுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதலுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது குறித்து அவர் விவாதிக்க உள்ளார்.

இதற்காக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பின் 20 அம்ச காஸா அமைதி திட்டத்தை பின்பற்றுமாறு இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவை வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காஸாவில் இடைக்கால நிர்வாகத்தை அமைத்தல், சர்வதேச படையை அனுப்புதல், இஸ்ரேல் படையினரை திரும்பப் பெறுதல் உள்ளிட்டவை திரு. ட்ரம்ப்பின் 20 அம்ச திட்டங்களில் இடம்பெற்றுள்ளது.

**<<<<>>>>**

ஃபிரெஞ்ச் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 21-12, 21-19 என்ற செட் கணக்கில் யுக்ரைனின் Oleksii - Yevheniia இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்திய வீரர் லக்ஷயா சென் தோல்வியடைந்தார்.

-------------

ஃபிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-7, 6-1, 10-7 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Martos-Hernandez இணையை வென்றது.

---------------

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியின் கபடிப் பிரிவில் இந்திய ஆடவர் அணி பாகிஸ்தானை வென்றது.

பஹ்ரைனின் மனாமா நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்திய அணி 81-26 என்ற புள்ளிக் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

மகளிர் பிரிவில் இந்திய அணி 59-26 என்ற புள்ளிக் கணக்கில் ஈரானை வென்றது.

<<<<The End>>>>